60. வானம் - விளிம்பு

நான் பிறந்து கோடி வருஷங்களாகி விட்டன. பிறக்கும் போதே எனக்கு வயது முப்பது கோடி.

ஆமாம், இளமையோ, வாலிபமோ அறியாதவன் நான். நினைக்க நினைக்க என் நினைவுகள் சருகு சருகாக உரிந்து கொண்டே போகிறது. காலண்டர்த் தாள்களைப் பின்னோக்கிக் கிழிக்கிறோம். காலம் எனும் காலண்டர் கவிழ்ந்து குப்புறக் கிடக்கிறது என் நினைவிலே.

என் வீடும் ஒரு ஸ்கைஸ்க் ரேப்பர்தான். அண்டையிலுள்ள எந்தக் கட்டிடமும் அவ்வளவு உயரமில்லை. என் வீட்டு மேல் மாடிக்குப் படிகிடையாது-மேல்கூரையைப் பிடித்துத் தொத்திக் கொண்டு ஏறிவிடலாம். ஏறி நின்றால் வானத்தையே தொட்டு விடலாம். சற்று ஜாக்கிரதையாகத் தலையை அசைக்க வேண்டும். அஜாக்கிரதையாக அசைத்தால் இரண்டு கிரஹங்களுடன் முட்டி கிரஹங்களுக்கும் சேதம் விளையும்-என் மண்டைக்கும் சொல்ப சேதம் விளையும். ஆற்றாத அரங்கு இவ்வுலகம். இவ்வடிகளின் பாதம் பெயரின் பாதாளமும் அதற்கப்பாலும் பெயரும் நிலைத்து நின்று விட்டாலோ வேர் விடும்.

மனமெனும் ஸ்புட்னிக்கில் ஏறி வானமெனும் வரம்பைக் கடந்து விடுகிறேன். எனக்கு ரிப்பன்களும் பதக்கங்களும் அளிக்கிறார்கள். ராஜ்ய சபையிலே என்னை அங்கத்தினனாக, அங்கஹீனனாகச் சேர்த்துக் கொள்கிறார்கள், கூப்பிட்டார்களே என்று போனால் அங்கு ராஜ சபையையே காணவில்லை. நான் இருந்த கல்லியர் ராஜ்யத்தையே காணவில்லை.

எங்கே சென்றாலென்ன-எப்படிச் சென்றாலென்ன. கூட வருவது நானேதானே! என்னை மீறி, என்னைத் தப்பி எங்கே நான் சென்று விடமுடிகிறது.

தப்ப முயற்சிப்பதே தவறு என்றும் தோன்றுகிறது. தப்ப முயற்சி செய்யாதிருப்பதும் தவறுதான்.

பின் என்னதான் செய்வது-செய்யாமலிருப்பது?

இந்தத் தடுமாற்றத்துக்கிடையே பொழுது கடந்து விடுகிறது-காலம் முடிந்து விடுகிறது.

எட்டுவதையும் எட்டாததையும் கண்டு கெட்டியாகப் பிடித்துக் கொள்கிறேன். கண்ணில் தட்டுவதையும் தட்டாததையும் பார்க்க மறுக்கிறேன். ஓடாததையும் ஓட வைக்கிறேன். ஓட்டாததையும் உடைத்து விடுகிறேன். பேசாததை ஊமையாக்கி விடுகிறேன்.

உலகில் உள்ள அகராதிகள் எல்லாம் என் வார்த்தைகள்-என் பேச்சு. அர்த்தம் கண்டுகொள்ளத் தெரிந்தவர் அறிந்தவரே. அகராதி வரிசைப்படுத்தியது யார்? யார்? ஏன்? ஏன்?

யார்? யார்? ஏன்? ஏன்? என்று ஆயிரத்து நாற்பத்தியெட்டுத் திசைகளிலிருந்தும் எதிரொலிக்கிறது. ஒரு ஒரு நட்சத்திரமாக வெடித்து என் வானத்திலே எழுகிறது. கரும்பலகையில் பிரபஞ்சத்தின் சட்டாம்பிள்ளை வைத்த புள்ளிகள் அவை; புள்ளிகளைச் சேர்த்துவிடும் சக்தி என்னுடையது; என் சக்தி உரம் பெறப் பெற, புள்ளிகள் ஒன்றோடொன்று உறவு பெறப் பெற, கோடுகள் இட்டுக் காட்டக் காட்ட வாழ்க்கை அர்த்தம் பெறுகிறது. ஞானிகள் வியாக்கியானங்கள் எழுதுகிறார்கள். சொற்கலைஞர்கள் ஒதுங்கி நின்று ஒட்டுக் கேட்கிறார்கள். சித்திரக் கலைஞர்கள் கண்களை மூடிக்கொண்டு வர்ண ஜாலங்களைக் காண்கிறார்கள். ஊமையன் பாடுகிறான்.

ஏற்றத் தாழ்வுகள் உண்டு. இல்லவும் இல்லை. இல்லை என்பதும் இல்லை. உண்டு என்பதும் உண்டு. போகப் போக திரௌபதிக்குக் கண்ணன் தந்த புடவைக் கடை மாதிரி உரிந்து கொண்டே, ரோடு ரோலாக, பட்டைப் பட்டையாக விரிந்து நீண்டு செல்லுங்காலம், வளைபாதையா அது-நேர்பாதையா? குறுகிய சந்தா? ராஜபாட்டையா? ஒருவழிப் போக்குவரத்தா- குருட்டுச் சந்தா?

எல்லாமுமா?

எதுவும் இல்லையா?

நான், நான் என்று என்று சொல்கிறேனோ அது நான் அது-எது என்று சொல்ல மறுக்கிறேனோ அதுவே அது.

குருநாதனின் வார்த்தைகள் காதில் ஒலிக்கின்றன; காதேது? வார்த்தைகள் எங்கே? தேடித் தேடியலுத்து விட்டேன்.

ஓயாது தேடுவதே காலம் காலண்டர் கணக்கு.

எதையோ தேடியலுத்துப் போவதற்கே மனிதன், நான் தோன்றியுள்ளேன். கிடைப்பதைத் தேடுவதில் அர்த்தமில்லை. கிடைக்காததைத் தான் தேடி ஓடவேண்டும்.

ஓடி ஓடி கால் மட்டும்தானா அலுக்கிறது-மனமும்தான் அலுக்கிறது.

ஒரு நாள் என்பது ஒருநாள் மட்டும்தானா? நாளே அதுவே ஒரு யுகம் அல்லவா? ஒரு யுகத்துக்குக் குறைந்த கணக்கு காலத்தைப் பற்றிய வரையில் இல்லை.

நான் இறந்து மூன்று கோடி வருஷங்களாகின்றன.

அதற்குமுன் முப்பது கோடி வருஷங்களும் நான் இறந்திருந்தேன்.

மூன்று கோடியும், முப்பது கோடியும், முப்பத்து முக்கோடி அல்ல எத்தனையோ முப்பத்து முக்கோடிகள்.

தேடாதே-அகப்பட மாட்டேன்.

ஒளியாதே-தேடமாட்டேன்.

இருக்காதே-போகமாட்டாய்

அகராதி-ஓயாது!

●

இலக்கிய வட்டம்
13.3.1964